## சுருக்கம்

ஊக்கத்தொகை - தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளில், விதி 110-இன் கீழான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – மாநில அரசில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிக்கான ஊக்கத் தொகை வழங்குதல் - வழிகாட்டு முறைகள் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

மனித வள மேலாண்மை (அவி-IV) துறை

அரசாணை (நிலை) எண். 120

நாள் : 01.11.2021
பிலவ, ஐப்பசி– 15,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்க:

1) அரசாணை (நிலை) எண். 37, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (அவி-IV) துறை, நாள் 10.03.2020.
2) அரசாணை (நிலை) எண். 116, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (அவி-IV) துறை, நாள் 15.10.2020.
3) அரசாணை (நிலை) எண். 293, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 18.06.2021.

*******

ஆணை:

அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 07.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளில், விதி 110-இன் கீழ் ஏனைய பிற அறிவிப்புகளுடன் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்:-

“அரசுப் பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்தில் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிகளுக்கான ஊக்க ஊதிய உயர்வு 2020 ஆம் ஆண்டு இரத்து செய்யப்பட்டது. அரசுப் பணியாளர்கள் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதியின் மூலம் அவர்களுடைய பணித்திறன் மற்றும் அவர்களது செயல்பாடுகள் மேம்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, உயர் கல்வித் தகுதிகளுக்கான ஊக்கத் தொகை, ஒன்றிய அரசால் அண்மையில் அறிவித்துள்ள வழிகாட்டு முறைகளின் அடிப்படையில் விரைவில் அறிவிக்கப்படும்”.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அனைத்துத் துறைகளிலும் பணியாற்றும் அரசுப் பணியாளர்கள் பெற்றுள்ள உயர் கல்வித் தகுதி தேர்ச்சிக்காக வழங்கப்பட்டு வந்த முன் ஊதிய உயர்வு மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் – I தேர்ச்சிக்காக வழங்கப்பட்டு வந்த முன் ஊதிய உயர்வினையும் நிறுத்தி வைக்கலாம் / இரத்து செய்யலாம் என கொள்கை முடிவெடுத்ததன்படி, மேற்குறிப்பிட்ட முன் ஊதிய உயர்வுகளை இரத்து செய்து, ஆணை வெளியிடப்பட்டது. தொடர்ந்து, இவ்வரசாணை தொடர்பாக சில தெளிவுரைகள், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டது.

3. தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதிகளில், விதி 110-இன் கீழ் ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட வழிகாட்டு முறைகளின் அடிப்படையில் இம்மாநில அரசுப் பணியாளர்களுக்கு கூடுதல் கல்வித் தகுதிக்கான ஊக்கத் தொகை அறிவிக்கப்படும் என்று அறிவித்துள்ளதன்படி, இம்மாநில அரசு ஊழியர்களுக்கு கூடுதல் கல்வித் தகுதிக்கான ஊக்கத் தொகை (Lump-sum), பின்வருமாறு வழங்கலாம் என

.....2

அரசு முடிவெடுத்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

| வ.எண். | கூடுதல் கல்வித் தகுதி தேர்ச்சி | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | முனைவர் (Ph.D) படிப்பு | 25,000/- |
| 2 | பட்ட மேற்படிப்பு (PG) அல்லது அதற்கு சமமானது | 20,000/- |
| 3 | பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பு | 10,000/- |

4. மேலே பத்தி 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊக்கத் தொகையை வழங்குவதற்கு பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகள் **தவறாமல் பின்பற்றப்பட வேண்டும்** என்றும் அரசு ஆணையிடுகிறது.

i. ஒரு பதவியின் பணிநியமன விதிகளின்படி, அப்பதவியில் பணியமர்த்தலுக்கு கட்டாய / விருப்பத் தகுதியாக (essential or desirable qualification) நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிகளுக்கு இவ்வூக்கத் தொகை வழங்கப்பட மாட்டாது.

ii. கல்வி சார் அல்லது இலக்கியம் சார்ந்த பாடப்பிரிவுகளில் (Academic or Literary subjects) பெறப்படும் உயர் கல்வித் தகுதிக்கு இவ்வூக்கத் தொகை அனுமதிக்கப்பட மாட்டாது.

iii. இருப்பினும், இக்கூடுதல் கல்வித் தகுதியானது, சம்பந்தப்பட்ட நபர்கள் பணிபுரியும் பதவிகளுக்குரிய பணிகளுக்கோ அல்லது அடுத்த உயர் பதவிக்கான பணிகளை ஆற்றுவதற்கோ நேரடித் தொடர்புடையதாக இருந்தால் இவ்வூக்கத் தொகை அனுமதிக்கலாம். <u>அரசுப் பணியாளரின் பணித் திறனை மேம்படுத்தும் வகையில் அக்கல்வித் தகுதியின் பங்களிப்பு இருக்க வேண்டும்</u>.

iv. துறை / பதவி நிலை / வகைப்பாட்டினை பொருட்படுத்தாமல், அனைத்து பதவிகளுக்கும் இவ்வூக்கத் தொகையின் அளவு ஒரே மாதிரியாக (uniform) இருக்க வேண்டும்.

v. அரசுப் பணியாளர் ஒருவர் கூடுதல் கல்வித் தகுதி பெறுவதற்கு அரசால் அனுப்பப்பட்டிருந்தாலோ அல்லது கல்வி விடுப்பைப் பயன்படுத்தி கூடுதல் கல்வித் தகுதி அடைந்திருந்தாலோ இவ்வூக்கத் தொகை அனுமதிக்கப்படமாட்டாது.

vi. அரசுப் பணியாளர் ஒருவர், அரசுப் பணியில் சேர்ந்த பிறகு கூடுதல் கல்வித் தகுதி பெற்றிருந்தால் மட்டுமே இவ்வூக்கத் தொகை வழங்கப்பட வேண்டும்.

vii. ஒரு பதவிக்கு பணியமர்த்தப்படுவதற்குத் தேவையான கல்வித் தகுதியினை தளர்த்தி பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு இவ்வூக்கத் தொகை அனுமதிக்கப்படமாட்டாது. மேலும், தேவையான அக்கல்வித் தகுதியை பின்னாளில் பெற்றிருந்தாலும் இவ்வூக்கத் தொகை அனுமதிக்கப்படமாட்டாது.

viii. இவ்வூக்கத் தொகை பெறுவதற்கான கல்வி, பல்கலைக் கழக மானியக் குழுவாலோ, ஒன்றிய/மாநில அரசு அல்லது அரசால் அமைக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறை அமைப்புகளான அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் குழுமம் [AICTE], அகில இந்திய மருத்துவக் குழு [Medical Council of India] போன்றவற்றாலோ அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ix. இவ்வூக்கத் தொகையானது குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் இடைவெளியில், அரசுப் பணியாளரின் பணிக்காலத்தில் அதிகபட்சம் இரண்டு முறை மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

x. ஓர் அரசுப் பணியாளர் கூடுதல் கல்வித் தகுதி பெற்ற ஆறு மாத காலத்திற்குள் இவ்வூக்கத் தொகை பெற உரிமை கோர வேண்டும்.

xi. 10.03.2020 அன்று அல்லது அதற்கு பிறகு கூடுதல் கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு இவ்வூக்கத் தொகையானது அனுமதிக்கப்பட வேண்டும்.

xii. 10.03.2020 அன்றிலிருந்து இவ்வாணை வெளியிடப்படும் நாளது வரை கூடுதல் கல்வித் தகுதி பெற்ற அரசுப் பணியாளர்கள் இவ்வூக்கத் தொகை பெற, இவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் உரிமை கோர வேண்டும்.

5. மேலும், இவ்வூக்கத் தொகை வழங்கும்பொருட்டு, தொடர்புடைய / உரிய தலைமைச் செயலகத் துறைகள், தத்தமது **துறையின்கீழ் செயல்படும் துறைத் தலைமையகங்கள் (ஆணையரகங்கள் / இயக்குநரகங்கள்) மற்றும் ஏனைய சார்நிலை அலுவலகங்களில் உள்ள எந்தெந்த பதவிகளுக்கு கூடுதல் கல்வித் தகுதி இன்றியமையாதது என்பதை இனங்கண்டு / தெரிவு செய்து**, மேலே பத்தி 4 (i) முதல் (xii) வரையிலான நிபந்தனைகளைப் பின்பற்றி, மனித வள மேலாண்மைத் துறை மற்றும் நிதித் துறையுடன் கலந்தாலோசித்து, உரிய துறைகள் தனித்தனியாக ஆணைகள் வெளியிட வேண்டும் எனவும், அவ்வாறு வெளியிடப்படும் ஆணைகளின் அடிப்படையிலேயே அத்துறையின்கீழ் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட ஊக்கத் தொகை வழங்கப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

6. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையை பொருத்தவரையில், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளையே தொடரலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணை, நிதித் துறையின் அ.சா. எண். 48308/CMPC/2021, நாள் 29.10.2021 - இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வெ. இறையன்பு,**
**அரசு தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

அனைத்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் /
அரசு முதன்மைச் செயலாளர்கள் / அரசு செயலாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.
தலைமைச் செயலக அனைத்துத் துறைகள், சென்னை – 600 009.
செயலாளர், சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை – 600 009.
அனைத்துத் துறைத் தலைவர்கள். (தலைமைச் செயலகத் துறை வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் /அனைத்து மாவட்ட நீதிபதிகள் /
அனைத்து மாவட்ட குற்றவியல் நடுவர்கள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 003.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை – 600 035.
முதன்மைக் கணக்காயர் (A & E) / (Civil Audit), சென்னை – 600 018.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை- 600 001.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை- 600 035.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை- 600 005.
சம்பள கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை – 625 001.
தலைமைப் பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை - 600 104.

பதிவாளர், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை - 625 023.
மாநிலக் கணக்காயர் (Audit – II), சென்னை – 600 018.
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காயர் அலுவலகம்,
சென்னை – 600 009.
இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சித் துறை தலைவர்,
சென்னை – 600 028.
முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.), சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை,
சென்னை-600 009.

**நகல்**

முதலமைச்சரின் செயலாளர் - III, முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
அரசு தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை-600 009.
அரசுச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-600 009.
தலைமைச் செயலக அனைத்துத் (அ.ந.மு. பிரிவு) துறைகள் (துறையின் அனைத்து பிரிவுகளுக்கும் அரசாணையின் நகலினை மேலனுப்பும் (Endorsement) பொருட்டு), தலைமைச் செயலகம், சென்னை-600 009.
அனைத்து அலுவலர்கள் / அனைத்துப் பிரிவுகள், மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-600 009.
மனிதவள மேலாண்மை (நி.சீ-2) துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-600 009. (தமிழ்நாடு அரசு இணையதளத்தில் பதிவேற்றும் பொருட்டு)
மனிதவள மேலாண்மை (நி.சீ-1) துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.
நிதி (மை. ம. ஆ. பி / ஊ.பி.- 1/2/3) துறை, சென்னை – 600 009.
நிதி (பொ. நி. மா. க. ) துறை, சென்னை - 600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

01/11/21

பிரிவு அலுவலர்

01/11/2021.